22nd July 1964]

வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருடத்திற்கு ஒரு தடவை கொடுத்தால் போதவில்லை என்றால் சப்ளிமெண்டரி இன்டென்ட் போட்டுக் கொடுக்கப்படுகிறது. ஆகவே கஷ்டமிருக்காது.

குடிசைத் தொழில்

* 616 கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "குடிசைத்தொழில்" என்ற இனத்தில் எந்தெந்த தொழில்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன ?

(இ) கை முறையில் சாயம் தோய்த்தல் (hand dyeing) குடிசைத் தொழில் பட்டியலில் சேர்க்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Any industrial business or enterprise carried on in any premises to which the Factories Act, 1948 (Central Act LXIII of 1948) does not apply is considered as a Cottage Industry.

(b) Dyeing is even now considered as a Cottage Industry and is under the purview of the All-India Handicrafts Board. But, it has not been notified as a Cottage Industry for purposes of the proviso to Section 92 (a) of the Madras Public Health Act, 1939.

Irrigation Schemes (Tiruchirappalli district)

* 617 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the details of the medium irrigation schemes considered for inclusion in Third Five-Year Plan in Tiruchirappalli district; and

(b) the present stage of the proposal?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) The following five irrigation schemes in Tiruchirappalli district were considered for inclusion in the Third Five-Year Plan, but all the schemes relating to the Cauvery Basin were excluded from consideration for the Third Plan by the Planning Commission:—

(1) Marudayar Scheme.
(2) Noyyal Reservoir Scheme.
(3) Reservoir across Ayyar in Kollimalai Hills.
(4) Reservoir across Vellar.
(5) Kodaganar Scheme.

The schemes are, however, being considered again for inclusion in the Fourth Five-Year Plan.

திரு.அ. பெ. தர்மலிங்கம்: இந்தக் குடகனாறு திட்டம் அடிக்கடி சட்டசபையில் பேசப்பட்டு வருகிறதே தவிர இதுவரையில் அதற்காக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. தாமதத்திற்கு காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. வெ. ராமைய்யா: பேசப்பட்டதோடு நின்று விட்டால் கஷ்டமிருக்காது. பேசியதற்கு அங்கீகாரம் கொடுத்து பூர்வாங்க வேலைகள் எல்லாம், இன்வெஸ்டிகேஷன் எல்லாம் நடந்து

முடிந்திருக்கிறது. அந்த ஸ்கீமும் காவேரியில் வந்து சேரும் ஒரு திட்டமாகயிருப்பதால் அதை மறுபரிசீலனை செய்யவேண்டு மென்று திட்டக் கமிஷன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில்தான் இப்போது பரிசீலனை நடந்து கொண்டிருக் கிறது.

திரு. செ. சதாசிவம் : நொய்யல் திட்டம் நீண்ட காலமாக பரி சீலனை செய்து முடியும் கட்டத்தில் இருப்பதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்து செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : மாநிலத்தில் பொதுவாக மீடியம் ஸ்கீம்களை, பலவற்றை நான்காவது திட்டம் வரையில் காத்திருக் காமல் மூன்றாவது திட்டத்திலேயே, வேலையை தொடங்க முடியுமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எது எது சாத்தியமோ அவற்றை தொடங்க வேண்டும் என்பதுதான். காவேரிப் பேசினைப் பொறுத்தவரை உடனடியாக இப்போது பதில் சொல்ல தயாராயில்லை. காவேரி பேசின் என்று சொன்னால் பக்கத்து ராஜ்யமும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் எந்த வித மான சிக்கலும் வந்துவிடக் கூடாது என்று கருதித்தான் சொல் கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : குடகனாறுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் பேசப்பட்டு அதற்காக சென்ற ஆண்டு கூட ஓரளவு தொகைகூட ஒதுக்கப்பட்டது. இப்போதும் அடுத்த ஆண்டு என்று வருவதால் இப்போதாவது அது சேர்த்துக் கொள்ளப்பட் டிருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன். சந்தேகிக்கக் காரணம், எங்கள் பகுதியில் அங்கு ஒரு திட்டத்திற்காக வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு கடைசியில் விடப் பட்டதென்று பேசப்பட்டு வருகிறது. அதில் இது சேர்க்கப்பட் டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : தனிக்கேள்வி போட்டால் எல்லா விவரங்களும் சொல்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காவேரி சம்பந்தப்பட்ட இந்த நான்கு திட்டங்களும் மேட்டூருக்குக் கீழே வந்து காவேரியில் விழக் கூடியது. அப்படியிருக்க இவற்றைக் கொண்டு அந்தத் தகராறில் சேர்ப்பானேன் ? பொதுவாக காவேரித் தண்ணீர் பங்கீட்டோடு சேர்க்காது இதைத் தனியாக எடுக்க நடவடிக்கை கள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லாம்தான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

சேரி ஒழிப்புத் திட்டம் (சேலம்)

* 618 **கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் நகரசபையாரிடமிருந்து சேரி ஒழிப்புத் திட்டத்திற்கு அரசாங்க உதவி கோரி ஏதாவது கோரிக்கை வந்ததா ?